1979 ஏப்ரல் 21

* வினா எண். 603—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திண்டுக்கல் கள்ளாத்துப்பட்டியில் உள்ள பள்ளியில் மதிய உணவு விஷம் கலந்து விட்டதன் காரணமாக மாணவர்கள் இறந்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பன்னாட்டு திராவிட மொழியியல் நிறுவனத்திற்கு மானியம்.

* வினா எண். 609—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள பன்னாட்டு திராவிட மொழியியல் நிறுவனத்திற்கு அரசு தொடர் செலவுகளுக்கும் தொடரா செலவுகளுக்கும் மானியங்கள் வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) திருவனந்தபுரத்திலுள்ள பன்னாட்டு திராவிட மொழியியல் பள்ளிக்கு 1978–79-ம் ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு ரூ. 1.36 இலட்சம் வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு தொடர் மானியமாக ஐந்தாண்டுத் திட்டப் பணிகளுக்காக அரசு ஒப்பளிப்புச் செய்துள்ளதுடன், தமிழ் இலக்கணப் பெரியார் தொல்காப்பியர் பெயரில் ஒரு கட்டடம் கட்டும் வகைக்காக தொடராச் செலவினமாக ரூ. 4.51 இலட்சம் வழங்கு வதற்கும் அரசு ஒப்புக்கொண்டு, இத்தொடரா மானியத்தின் முதற் தவணையாக ரூ. 1 இலட்சம் வழங்க ஆணையிட்டுள்ளது. மீதித் தொகை கட்டடம் கட்டுமானப் பணி முடியக்கூடிய நிலையில் இரண்டு சம தவணைகளில் வழங்கப்படும்.

உள்ளாட்சி மன்றங்கள் உள்ள கட்டிடங்கள்.

* வினா எண். 610—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) உள்ளாட்சி மன்றப் பகுதிகளில் அமைந்துள்ள கட்டிடங்கள் இடிக்கப்படுவது பற்றிய தாக்கீது ஏதேனும் உள்ளாட்சி மன்றங்களுக்கு அண்மையில் அனுப்பப்பெற்றதா?

(ஆ) ஆம் எனில். அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

ஊராட்சி ஒன்றிய டிராக்டர் ஓட்டுநர்களுக்கு வழங்கப்படும் ஊதியம்

* வினா எண். 611—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிய டிராக்டர்கள் ஓடாத காலங்களிலும் பழுதுபார்க்க விடப்படும் காலங்களிலும் அவற்றின் டிரைவர்களுக்கு கொடுக்கப்படும் ஊதியங்கள் தலநிதிக் கணக்கு தணிக்கையில் ஆட்சேபிக்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) 60 நாட்களுக்கு மேல் டிராக்டர் பணியின்றி இருந்தாலோ அல்லது பணிமனையில் இருக்க நேரிட்டாலோ அதனை உடனடியாக ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு தெரிவித்து உரிய ஆணைகள் பெற்று தணிக்கை தடைகள் எழாவண்ணம் பார்த்துக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே. இந்த ஊராட்சி ஒன்றிய டிராக்டர்கள் பணியில் இல்லாது 60 நாளைக்கு மேல் இருக்கக் கூடாது என்று ஆணையிட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த இடைக் காலத்தில், அந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஓட்டுநராக பணியாற்றுபவர்களுக்கு ஊதியம் கொடுக்கக்கூடாது என்று தணிக்கை அதிகாரிகள் ஆட்சேபம் தெரிவித்து இருப்பதாகத் தெரிகிறது. அதைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஆட்சேபணை செய்து, அதன் மூலம் சம்பளப் பிடித்தம் செய்வதாக தலைமை உள்ளாட்சிக் கணக்காய்வாளர் கூறியிருக்கிறார்.